# மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# மேலும் 5 வழித்தடங்களில் 11 சிறிய பஸ்கள் இயக்கம்!

சென்னை, ஜூலை.30–

சென்னை மெட்ரோ ரெயில்நிலையங்களில் இருந்து 13 வழித்தடங்களில் 30 சிறிய பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது மேலும் 5 வழித்தடங்களில் 11 சிறிய பஸ்கள் இயக்கப்படுகின்றன.

இது குறித்து மாநகர போக்குவரத்து கழகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் சென்னைமெட்ரோரெயில் நிலையங்களில் இருந்து இணைப்புசிறியபஸ்கள்13 வழித்தடங்களில் 30 சிறிய பஸ்கள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் வேண்டுகோளைஏற்று 2–வதுகட்டமாக இயக்கப்பட்ட மெட்ரோரெயில்நிலையங்களையும் இணைக்கும் வகையில் மேலும் 5 வழித்தடங்களில்11சிறியபஸ்கள் இயக்கப்படுகின்றன.

வண்ணாரப்பேட்டை மெட்ரோரெயில்நிலையத்தில் இருந்து ஐஓசி பஸ் நிலையத்திற்குகொருக்குப்பேட்டை வழியாக 2 பஸ்களும், வண்ணாரப்பேட்டையில் இருந்து எழும்பூர் ரெயில் நிலையம் வரை வால்டாக்ஸ்ரோடு, சென்ட்ரல் மெட்ரோ வழியாக 2 பஸ்களும், எல்ஐசி மெட்ரோஇருந்துவிவேகானந்தர்இல்லம்வரை எக்ஸ்பிரஸ் அவென்யு, ராயப்பேட்டை மருத்துவமனை வழியாக 2 சிறிய பஸ்களும் இயக்கப்படுகின்றன.

டிஎம்எஸ்மெட்ரோவில் இருந்து நுங்கப்பாக்கம் ரெயில் நிலையம் வரை லயோலாகல்லூரிவழியாக 2சிறியபஸ்களும்ஆலந்தூர் மெட்ரோவில் இருந்து டிஎல்எப் வரை பட்ரோடு, நந்தம்பாக்கம் வழியாக 3 சிறியபஸ்களும்இயக்கப்படுகின்றன என்று அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.